[2022] 18 எஸ்.சி.ஆர் 605

இந்திய ஒன்றியம் மற்றும் பலர்

–எதிர்–

சுப்ரதா நாத்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.7939–7940/2022)

நவம்பர் 23, 2022

[மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் முனைவர் தனஞ்சய ஒய்.

சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் ஹிமா கோலி]

பணிச் சட்டம்: மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை விதிகள், 2001 : விதி 32 – ஒழுங்குமுறை அதிகாரிகள் – துறைமுக வளாகத்திற்கு வெளியே செப்பு கம்பிகளை ஏற்றிய ஒரு லாரியை உள்ளூர் காவல்துறையினர் தடுத்து நிறுத்தி, எதிர்மேல்முறையீட்டாளர்–காவலர் பணியில் இருந்த நேரத்தில் துறைமுகத்திலிருந்து பயனற்ற செப்பு கம்பிகள் அகற்றப்பட்டதாக மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கொடுத்தனர் – கவனக்குறைவு மற்றும் பல்வேறு குற்றங்களுக்காக எதிர்மேல்முறையீட்டாளர் இடைநீக்கம் செய்யப்பட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது – ஒழுங்குமுறை ஆணையம் பணியில் இருந்து பணிநீக்கம் செய்வதற்கான தண்டனையை விதித்தது, இது மேல்முறையீட்டு மற்றும் சீராய்வு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்டது – பணி நீக்க தண்டனையை கட்டாய ஓய்வாக மாற்றியமைத்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது – நீதியர் அமர்வு, எதிர்மேல்முறையீட்டாளரை முழு ஊதியத்துடன் மீண்டும் பணியில் அமர்த்தவும், மேலும் அவரின் கவனக்குறைவு மற்றும் கடமை தவறுதலுக்கு

ஈடாக எதிர்மேல்முறையீட்டாளர் மீது புதிய தண்டனை உத்தரவை பிறப்பிக்கவும் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு உத்தரவிட்டது – மேல்முறையீட்டில், முடிவு : விசாரணை அறிக்கையின் ஒரு பகுதியாக உள்ள சாட்சியங்களை ஆய்வு செய்வதற்கான தனிப்பட்ட அதிகாரத்தை ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையம் ஆகிய இரண்டுமே பெற்றுள்ளன – துறை ரீதியான விசாரணையின் போது போதுமான மற்றும் நம்பகமான ஆதாரங்கள் இருப்பதைக் கண்டறிந்தால், ஒழுங்குமுறை ஆணையம் தவறான நடத்தைகளின் தீவிரத்தை மனதில் கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட பணியாளருக்கு பொருத்தமான தண்டனையை விதிக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது – நீதித்துறை மறுஆய்வு அதிகாரங்களைப் பயன்படுத்துவதில், உயர் நீதிமன்றம்/தீர்பாயமானது, விதிக்கப்பட்ட தண்டனையானது குற்றத்திற்கு மிகவும் ஏற்றதாக இல்லாத வரையில், விதிக்கப்பட்ட தண்டனையைப் பொறுத்தமட்டில் அதன் சொந்த முடிவுக்கு வருவதற்கான ஆதாரங்களை சாதாரணமாக மறுமதிப்பீடு செய்ய முடியாது – தனி நீதிபதியும், நீதியர் அமரவும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட பணிநீக்க உத்தரவை நீக்கறவு செய்ததன் மூலம் பிழை புரிந்துள்ளனர், எனவே, உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது, அதே சமயம், மேல்முறையீட்டு ஆணையம் மற்றும் சீராய்வு ஆணையத்தால் உறுதி செய்யப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் தீர்ப்புரை மீட்டெடுக்கப்படுகிறது.

மேல்முறையீடுகளை தீர்ப்பளித்த நீதிமன்றம் தீர்மானித்ததாவது :–

1.1. துறை ரீதியான விசாரணையில் பதிவுசெய்யப்பட்ட பொருண்மைகளின் காண்முடிவுகள், முரண்பட்டோ அல்லது பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களுடன் முற்றிலும் பொருந்தாத சூழ்நிலைகளிலோ நீதிமன்றங்கள் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பது நன்கு தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். இருப்பினும், இயற்கை நீதிக் கோட்பாடுகள் மீறப்பட்டாலோ அல்லது சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் தவறான நோக்கங்கள் இருந்தாலோ, நீதிமன்றங்கள் நிச்சயமாக தலையிட முடியும்.

1.2. பொருண்மையைக் கண்டறியும் ஆணையங்களாக இருப்பதால், ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையம் ஆகிய இரண்டுக்கும் விசாரணை அறிக்கையின் ஒரு பகுதியாக உள்ள சாட்சியங்களை ஆய்வு செய்வதற்கான தனிப்பட்ட அதிகாரம் உள்ளது. துறை ரீதியான விசாரணையின் போது போதுமான மற்றும் நம்பகமான ஆதாரங்கள் இருப்பதைக் கண்டறிந்தால், ஒழுங்குமுறை ஆணையம் தவறான நடத்தைகளின் தீவிரத்தை மனதில் கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட பணியாளருக்கு பொருத்தமான தண்டனையை விதிக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. எனினும், நீதித்துறை மறுஆய்வு அதிகாரங்களை பயன்படுத்தி, உயர்நீதிமன்றம் அல்லது அந்த வழக்கில், தீர்ப்பாயம், விதித்த தண்டனையைப் பற்றி அதன் சொந்த முடிவுக்கு வருவதற்கு ஆதாரங்களை மறுபரிசீலனை செய்ய முடியாது, உயர் நீதிமன்றம்/தீர்ப்பாயமானது, விதிக்கப்பட்ட தண்டனை குற்றத்திற்கு மிகவும் ஏற்றதாக இல்லாத வரையிலோ அல்லது பிற காரணங்களுக்காக

குறைபாடுகள் இருப்பதாகக் கண்டறியப்படும் வரையிலோ விதிக்கப்பட்ட தண்டனையைப் பொறுத்தமட்டில் அதன் சொந்த முடிவுக்கு வருவதற்கான ஆதாரங்களை சாதாரணமாக மறுமதிப்பீடு செய்ய முடியாது.

1.3. தனி நீதிபதி மற்றும் நீதியர் அமர்வின் அணுகுமுறையை ஏற்க முடியாது. விசாரணை அதிகாரியின் முன் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் தொடர்பான பொருண்மை குறித்த அம்சங்களை உயர்நீதிமன்றம் விசாரிப்பதற்கு சரியான காரணம் எதுவும் இல்லை. இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 226 இன் கீழ், உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட நீதித்துறை மறுஆய்வு அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் அனுமதிக்கப்படாத சாட்சியத்தை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு முயற்சி இது என்பது தெளிவாகிறது. தனி நீதிபதி மற்றும் நீதியர் அமர்வு ஆகிய இருவரும், ஒழுங்குமுறை ஆணையத்தால் எதிர்மேல்முறையீட்டாளர் மீது விதிக்கப்பட்ட மற்றும் மேல்முறையீட்டு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பணிநீக்க உத்தரவை நீக்கறவு செய்ததன் மூலம் பிழை புரிந்துள்ளனர்.

1.4. எதிர்மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ஆகிய இரண்டையும் பொறுத்தவரை, மேல்முறையீட்டு ஆணையத்தால் முறையாக ஏற்கப்பட்டு, சீராய்வு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் தீர்முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எதிர்மேல்முறையீட்டாளர் ஒழுங்குமுறைப் படை உறுப்பினராக இருப்பதால், அவர் தனது கடமையை விடாமுயற்சியுடன் நிறைவேற்றியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவரது

கவனக்குறைவு மற்றும் கடமை தவறியதன் விளைவாக அவர் பணியாற்றிய இடத்திலிருந்து 800 கிலோ செப்புக் கம்பிகள் திருடப்பட்டன. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர் பணியாற்றிய பதின்மூன்று வருட பணிக்காலத்தில், தனது குணங்களைத் திருத்திக் கொள்ளவில்லை என்றும், பல்வேறு குற்றங்களுக்காக எட்டு தண்டனைகள் வழங்கப்பட்டன என்றும் அவற்றில் மூன்று தண்டனைகளில் இரண்டு முறை ஊதிய உயர்வை ஓராண்டுக்கு நிறுத்துவது மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்த பலன்களும் இல்லாமல் இரண்டு ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வை நிறுத்துவது ஆகியவை அடங்கும் என்று பதிவேடுகளின் மூலம் வெளிப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலைகளில், எதிர்மேல்முறையீட்டாளர் ஆயுதப்படையில் தொடர்ந்து பணியாற்றுவது நிச்சயமாக சந்தேகத்திற்குரியது மற்றும் அவர் மீது பணியில் இருந்து நீக்கப்பட்டதற்கான தண்டனையை விதிக்கும் போது, அவரது கடந்தகால நடத்தை தொடர்பாக ஒழுங்குமுறை ஆணையத்தின் வேறு கண்ணோட்டத்தை எதிர்பார்க்க முடியாது.

1.5. மேல்முறையீட்டு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்டு, சீராய்வு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் தீர்முடிவுகளையும், காண்முடிவுகளையும் மீட்டளிக்கும் அதே வேளையில், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையை நீக்கறவு செய்வதும், இரத்து செய்வதும் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. எதிர்மேல்முறையீட்டாளரின் மீது விதிக்கப்பட்ட பணிநீக்கம் என்ற தண்டனையானது அவரது ஒட்டுமொத்த அலட்சியம் மற்றும் கடமை தவறியமைக்கு ஏற்ப உள்ளது.

பி.சி. சதுர்வேதி –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் பலர் (1995) 6 எஸ்சிசி 749 : [1995] 4 சப்ளிமெண்ட் எஸ்.சி.ஆர் 644; ஓரிசா மாநிலம் மற்றும் பலர் –எதிர்– பித்யபூஷன் மொஹபத்ரா ஏஐஆர் 1963 எஸ்சி 779 : [1963] 1 சப்ளிமெண்ட் எஸ்.சி.ஆர் 648; மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை மற்றும் பலர் –எதிர்– அப்ரார் அலி (2017) 4 எஸ்சிசி 507; ஸ்டேட் பாங்க் ஆஃப் பிகானீர் மற்றும் ஜெய்ப்பூர் –எதிர்– நேமி சந்த் நல்வாயா (2011) 4 எஸ்சிசி 584 : [2011] 3 எஸ்சிஆர் 589; தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், வி.எஸ்.பி. மற்றும் பலர் –எதிர்– கோபராஜு ஸ்ரீ பிரபாகர ஹரிபாபு (2008) 5 எஸ்சிசி 569 : [2008] 3 எஸ்.சி.ஆர் 1184; இந்திய ஒன்றியம் மற்றும் பலர் –எதிர்– பி.குணசேகரன் (2015) 2 எஸ்சிசி 610 : [2014] 13 எஸ்சிஆர் 1312; இந்திய ஒன்றியம் மற்றும் பலர் –எதிர்– முன்னாள் காவலர் ராம் கரண் (2022) 1 எஸ்சிசி 373; இந்திய ஒன்றியம் –எதிர்– சர்தார் பகதூர் (1972) 4 எஸ்சிசி 618 : [1972] 2 எஸ்.சி.ஆர் 218 – குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[1995] 4 சப்ளிமெண்ட் எஸ்.சி.ஆர் 644	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 11
[1963] 1 சப்ளிமெண்ட் எஸ்.சி.ஆர் 648	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 12
[2011] 3 எஸ்சிஆர் 589	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 17
[2014] 3 எஸ்சிஆர் 1184	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 18
[2014] 13 எஸ்சிஆர் 1312	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 19
[1972] 2 எஸ்.சி.ஆர் 218	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 21

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.7939–7940/2022.

கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் எஃப்.எம்.ஏ.எண்.679/2019 உடன் எஃப்.எம்.ஏ.எண்.680/2019 ஆகியவற்றில் 09.09.2021 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்.7941–7942/2022.

தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள் – ராமேஷ்வர் பிரசாத் கோயல், செல்வி ஆகான்ஷா கவுல், ராஜன் குமார் சௌராசியா, திருமதி நிதி கன்னா, ராகவ் சர்மா, அரவிந்த் குமார் சர்மா, ரஞ்சன் முகர்ஜி.

நீதிமன்ற தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் ஹிமா கோலி அவர்களால் பகரப்பட்டது.

1–2. இந்த உத்தரவின் மூலம், இந்திய ஒன்றியத்தால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மேல்முறையீடுகள் மற்றும் தனிப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீடுகள் ஆகியவற்றில், கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு எஃப்.எம்.ஏ.எண். 679/2019 மற்றும் எஃப்.எம்.ஏ.எண்.680/2019 ஆகியவற்றில் 09.09.2021 தேதியன்று பிறப்பித்த பொதுத் தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராக முடிவு செய்ய முன்மொழிகிறோம்.

3. வசதிக்காக, உரிமையியல் மேல்முறையீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மைகள் சுலபமாகக் குறிப்பிடப்பட வேண்டும். எதிர்மேல்முறையீட்டாளர் 26.02.1994 அன்று மத்திய தொழில்துறை

பாதுகாப்புப் படையில் (சுருக்கமாக 'சி.ஐ.எஸ்.எஃப்') காவலராக சேர்ந்தார். 07.11.2007 அன்று, கொல்கத்தா துறைமுகத்தின் கார்டன் ரீச் பகுதியில் அமைந்துள்ள அலிஃப் நகர் ஸ்கிராப் யார்டில் 07.11.2007 அன்று 21:00 மணி முதல் 08.11.2007 அன்று 05:00 மணி வரை 'சி' ஷிப்ட் பணியில் எதிர்மேல்முறையீட்டாளர் இருந்தார் என்று விவரிக்கப்பட்டது. அடுத்த நாள், அதாவது 08.11.2007 அன்று, துறைமுக வளாகத்திற்கு வெளியே சுமார் 800 கிலோ (தோராயமாக) செப்புக் கம்பிகளை ஏற்றிக்கொண்டு வந்த டாடா –407 லாரியை உள்ளூர் காவல்துறையினர் தடுத்து நிறுத்தி சோதனையிட்டதில், கொல்கத்தா துறைமுக பொறுப்புக் கழகப் பகுதியிலிருந்து செப்புக் கம்பிகள் அகற்றப்பட்டதை அறிந்தவுடன் மேற்கூறிய சம்பவம் குறித்து சிஐஎஸ்எஃப்–க்கு தகவல் தெரிவித்தனர். எதிர்மேல்முறையீட்டாளர் பணியில் இருந்த சமயத்தில் கொல்கத்தா அலிஃப் நகர் துறைமுகத்தின் ஸ்கிராப் யார்டில் இருந்து மேற்கண்ட செப்புக் கம்பிகள் அகற்றப்பட்டதாக தெரியவந்தது. 07.12.2007 நாளிட்ட குறிப்பாணையின்படி எதிர்மேல்முறையீட்டாளர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுக்களின் விதிகள் பின்வருமாறு :–

> "<u>கொல்கத்தாவிலுள்ள கொல்கத்தா துறைமுக சிஐஎஸ்எஃப் பிரிவில் பணியாற்றிய காவலர் எண்.941400817 சுப்ரதா நாத் மீது வணையப்பட்ட குற்றச்சாட்டின் விவர அறிக்கை.</u>
>
> <u>குற்றச்சாட்டு விதி – I</u>

கொல்கத்தாவில் உள்ள கொல்கத்தா துறைமுக சிஐஎஸ்எஃப் பிரிவின் ('சி' கோய்) எண்.941400817 கொண்ட காவலர் சுப்ரதா நாத், 07.11.2007 அன்று 21.00 மணி முதல் 08.11.2007 அன்று 05.00 வரை அலிஃப் நகர் ஸ்கிராப் யார்டில் ஆயுதங்களுடன் 'சி' ஷிப்ட் பணியில் ஈடுபட்டிருந்தபோது, கொல்கத்தாவில் உள்ள கொல்கத்தா துறைமுக அலீஃப் நகர் ஸ்கிராப் யார்டில் எண்.941400817 கொண்ட காவலர் சுப்ரதா நாத் பாதுகாப்பின் கீழ், 800 கிலோ எடை கொண்ட செப்பு கம்பிகள் திருடப்படுவதைத் தடுக்க தவறிவிட்டார்.

941400817 என்ற எண் கொண்ட காவலர் சுப்ரதா நாத்தின் தரப்பில், மேற்படி செயல் ஒழுங்குமுறைப் படையின் உறுப்பினராக இருப்பதால், தனது கடமைகளில் கவனக்குறைவாகவும் அலட்சியமாகவும் இருந்துள்ளார்.

குற்றச்சாட்டு விதி – II

கொல்கத்தாவில் உள்ள கொல்கத்தா துறைமுக சிஐஎஸ்எஃப் பிரிவின் எண்.941400817 காவலர் சுப்ரதா நாத், தனது 13 ஆண்டுகால சிஐஎஸ்எஃப் பணியின் போது பல்வேறு குற்றங்களில்

ஈடுபட்டுள்ளார். இதனால் அவருக்கு 8 தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. அப்போதும் அவர் தன்னை திருத்திக் கொள்ளாமல், திருத்தி அமைக்க முடியாத அளவிற்கு சென்றுவிட்டார்."

4. மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். விசாரணையின்போது, அரசு தரப்பு சாட்சிகளாக 8 பேர் விசாரிக்கப்பட்டனர். ஆயினும், எதிர்மேல்முறையீட்டாளர் தனது எதிர்வழக்குரையில் எந்த சாட்சியையும் முன்னிலைப்படுத்தவில்லை. சாட்சியங்களையும் எதிர்மேல்முறையீட்டாளரின் எதிர்வாதங்களையும் ஆராய்ந்த பின்னர், எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுக்களும் முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளன என்று விசாரணை அதிகாரி கருதினார். விசாரணை அறிக்கையுடன் தொடர்புடைய விளக்கம் கோரும் அறிவிப்பை ஒழுங்குமுறை ஆணையம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கியது, அதற்கு பதிலளிக்கும் விதமாக அவர் ஒரு விளக்கவுரையை சமர்ப்பித்தார். 27.11.2008 தேதியிட்ட ஆணையின்படி, ஒழுங்குமுறை அதிகாரியான படைத்தலைவர், எதிர்மேல்முறையீட்டாளரின் விளக்கவுரையை நிராகரித்தார். அரசுத் தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்கள் குற்றம் நடந்த இடத்தை உறுதிப்படுத்தியதையும், எதிர்மேல்முறையீட்டாளர் பணியிடத்தில் பணியில் இருந்தபோது அலிஃப் நகர் ஸ்கிராப் யார்டில் இருந்து செப்பு கம்பிகள் திருடப்பட்டதாகவும் நிறுவப்பட்டது. மேலும், 7/8 நவம்பர் 2007 தேதிகளின் இடைப்பட்ட இரவில் ஒன்பது வெவ்வேறு சோதனை அதிகாரிகள்

எதிர்மேல்முறையீட்டாளர் பணியிடத்தில் கவனமாக பணியாற்றினாரா என்று சோதனையிட்டதாகவும், இருந்தபோதிலும் அவர் தனது பணியிடத்தில் எந்தவொரு குற்றச் செயல்கள் குறித்து புகார் அளிக்கவில்லை என்றும் அரசுத் தரப்பு சாட்சிகள் நிரூபித்தனர்.

5. 08.11.2007 அன்று 15.30 மணியளவில் குற்றம் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனது பணி நேரத்தில் திருட்டு நடக்கவில்லை என்றும் எதிர்மேல்முறையீட்டாளரால் முன்வைக்கப்பட்ட வாதத்தை நிராகரித்த ஒழுங்குமுறை ஆணையர், கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார் :–

> "12. மேற்கண்ட அனைத்து அம்சங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு, ஆவண மற்றும் சூழ்நிலை சாட்சியங்களுடன் நிறுவப்பட்ட உறுதிப்படுத்தும் அறிக்கைகளின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிக்கு எதிராக குற்றச்சாட்டு விவரங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று நான் கருதுகிறேன். மறுபுறம், குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி தனது விளக்கவுரையில் குற்றச்சாட்டு–1 விவரத்தை நிராகரிக்க எந்த உறுதியான ஆதாரங்களையும் கொண்டு வர முடியவில்லை. அவரால் எதிர்தரப்பு சாட்சியை முன்வைக்க முடியவில்லை. விசாரணையின் போது அவர் சமர்ப்பித்த எதிர் ஆவணங்கள் அவருக்கு ஆதரவாக எதையும் நிரூபிக்க முடியவில்லை.

08.11.2007 அன்று சுமார் 15:30 மணியளவில் தனது கடமை நேரத்தில் நடந்த அனைத்து திருட்டு கூற்றுக்களையும் மறுக்க விரும்பிய அவரால் சமர்ப்பிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் (பி.சா–6) ஆழமாக ஆராயப்பட்டது.

XXX XXX XXX

XXX XXX

மேற்கண்ட புகாரிலிருந்து, 08.11.2007 அன்று 15:30 மணியளவில் குற்றம் நடந்ததாகவும், அலி:ப் நகர் கே.எம்.சி துப்புரவாளர் குடியிருப்பில் திருடப்பட்ட சில செப்புக் கம்பி சுருள்கள் ஏற்றப்பட்ட டாடா –407 வாகனம் மீட்கப்பட்டதாகவும் முதல் தகவல் அறிக்கை காட்டுகிறது ஆனால் 08.11.2007 அன்று 15:15 மணிக்கு புகார்தாரரால் செப்புக் கம்பி மீட்கப்பட்டது என்பது தெளிவாகிறது. எனவே, செப்பு கம்பி திருட்டு நடந்ததற்கு முன்பே மீட்கப்பட்டது என்ற விளக்கமானது சாத்தியமற்றது மற்றும் உண்மையில் அர்த்தமற்றது. மேலும், 08.11.2007 தேதி இரவு 22:00 மணிக்கு தகவல் பெறப்பட்டதாகவும், திருட்டு சம்பவம் மதியம் 15:30 மணிக்கு நடந்ததாகவும், அதே நாளில் மதியம் 15:15 மணிக்கு மீட்கப்பட்டதாகவும் முதல் தகவல் அறிக்கை குறிப்பிடுகிறது. இவை அனைத்தும்

மேற்கு துறைமுக காவல் நிலையத்தின் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிக்கு தகவல் வருவதற்கு முன்னரும், திருட்டு சம்பவத்திற்கு முன்பே மீட்கப்பட்டதையும் வெளிப்படுத்துகின்றன…….. இவ்வனைத்து பொருண்மைகளையும் ஒன்றிணைத்துப் பார்த்தால், முதல் தகவல் அறிக்கை, டாடா–407 வாகனத்தில் ஏற்றப்பட்ட செப்புக் கம்பி மீட்கப்பட்டதையும், அ.சா–1, அ.சா–2 & அ.சா–8 இன் வாக்குமூலங்கள் 08.11.2007 காலையில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் காவலர் சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்தது என்ற பொருண்மையை உறுதிப்படுத்துகிறது என்பதும் தெளிவாகிறது. மேற்கூறிய அனைத்தும் ஒட்டுமொத்தமாக, குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியின் பணி காலத்தில் 07/08.11.2007 இரவில் அலி:ப் நகர் ஸ்கிராப் யார்டில் இருந்து செப்புக் கம்பி திருடப்பட்டது என்றும், மேலும் அந்த செப்பு கம்பி பின்னர் வெஸ்ட் போர்ட் போலீசாரால் மீட்கப்பட்டது என்றும் 08.11.2007 அன்று காலை மேற்கு துறைமுக காவல் நிலையத்தில் அ.சா–1, அ.சா–2 மற்றும் அ.சா–8 ஆகியோரின் வருகைக்கு முன்பே டாடா–407 வாகனத்தில் ஏற்றப்பட்டு அவர்களின் காவலில்

வைக்கப்பட்டது என்பது நிறுவப்பட்டுள்ளது……. குற்றச்சாட்டு விவரம் –II ஐப் பொறுத்தவரை, குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி சிஐஎஸ்எஃப் பிரிவில் தனது 13 வருட பணியில் பல்வேறு குற்றங்களுக்காக 08 முறை தண்டனைகளை பெற்ற பின்னரும் தன்னை சீர்திருத்திக் கொள்ளாத திருத்த முடியாத தன்மையை உருவாக்கியுள்ளார் என்பதை அ.சா–4 இன் வாக்குமூலம் மற்றும் பதிவில் உள்ள ஆவண ஆதாரங்கள் தெளிவாக நிறுவுகின்றன என்பதை நான் கண்டறிந்தேன். அரசுத் தரப்பு வாதம் மற்றும் எதிர்த்தரப்பு வாதம் ஆகியவற்றில் மேலே மதிப்பிடப்பட்ட, விவாதிக்கப்பட்ட மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட பொருண்மை மற்றும் பொருண்மை நிலையிலிருந்து, விசாரணை அதிகாரி எடுத்த முடிவுகள் அனைத்து அம்சங்களிலும் நியாயமானவை, தகுதியானவை மற்றும் நீதித்துறையால் நியாயப்படுத்தப்பட்டவை என்று நான் கருதுகிறேன். எனவே, விசாரணை அதிகாரியின் கண்டுபிடிப்புகளை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன், மேலும் குற்றச்சாட்டு விதி–I மற்றும் குற்றச்சாட்டு விதி–II ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியை குற்றவாளி என்று கருதுகிறேன்."

6. மேற்கண்ட காண்முடிவுகளைக் கருத்தில் கொண்டும், மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை விதிகள், 2001 (சுருக்கமாக 'சி.ஐ.எஸ்.எஃப் விதிகள், 2001') இன் அட்டவணை–1 மற்றும் விதி 32 (1) உடனிணைந்த விதி 32 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியும், ஒழுங்குமுறை ஆணையம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பணியிலிருந்து பணிநீக்கம் செய்வதற்கான தண்டனையை விதித்தது. ஒழுங்குமுறை ஆணையத்தால் 27.11.2008 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் மனக்குறையுற்ற எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு தாக்கல் செய்தார், அது 03.02.2009 அன்று பின்வரும் கருத்துரைகளுடன் தள்ளுபடி செய்யப்பட்டது :–

> "5. மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு, துறை ரீதியான நடவடிக்கைக் கோப்புகள், விசாரணை அதிகாரியின் காண்முடிவுகள் மற்றும் பதிவில் உள்ள பிற தொடர்புடைய ஆவணங்களை நான் கவனமாக பரிசீலித்தேன், மேலும் இந்த வழக்கில் எனது கவனத்தை செலுத்தினேன். மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டு விதிகள் பதிவேடுகளில் உள்ள ஏராளமான ஆதாரங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று நான் கண்டறிந்தேன். விசாரணை அதிகாரி விசாரணையை நியாயமான மற்றும் நேர்மையான முறையில் நடத்தி, அவருக்கு

எதிரான ஆதாரங்களை மறுக்கவும், அவரது வாதத்திற்க்கு ஆதரவாக போதுமான ஆவணங்களை சமர்ப்பிக்கவும் அனைத்து நியாயமான வாய்ப்புகளையும் வழங்கினார். ஆனால், அவர் அதைச் செய்யத் தவறிவிட்டார். இந்த வழக்கில் பொருள் முறைகேடோ அல்லது நீதித் தவறுகையோ இல்லை. 7.11.2007 அன்று 21.00 மணி முதல் 08.11.2007 அன்று 05.00 மணி வரை அலிஃப் நகர் ஸ்கிராப் யார்டில் 'சி' ஷிப்ட் பணியில் இருந்தபோது, கொல்கத்தா துறைமுக அலிஃப் நகர் ஸ்கிராப் யார்டில், மேல்முறையீட்டாளரின் பாதுகாப்பின் கீழ் மற்ற செப்புக் கம்பிகளுடன் சேர்ந்து கிடந்த சுமார் 800 கிலோ எடையுள்ள செப்புக் கம்பி திருடப்படுவதைத் தடுக்கத் தவறியதற்காகவும், ஒழுங்குமுறை படை உறுப்பினரிடமிருந்து எதிர்பார்த்தபடி அவரது நடத்தையை மேம்படுத்தாமலும், அவரது 13 வருட குறுகிய கால பணியில் திருத்த முடியாத பழக்கங்களுக்காக 08 (எட்டு) சந்தர்ப்பங்களில் முன்னர் தண்டிக்கப்பட்டதாலும், குற்றத்தின் தீவிரத்தன்மை மற்றும் ஆவணங்களில் உள்ள வழக்கின் அனைத்து அம்சங்களையும் பரிசீலித்த பின்னர் ஒழுங்குமுறை ஆணையம், 27.11.08

தேதியிட்ட இறுதி ஆணை எண் V-15014/Maj-04/KoPT/Disc/SN/08/8271 இன் படி மேல்முறையீட்டாளருக்கு "பணியிலிருந்து பணிநீக்கம்" என்ற தண்டனை விதித்து இறுதி உத்தரவை பிறப்பித்துள்ளது. மேல்முறையீட்டாளர் எந்தவொரு உறுதியான மற்றும் தர்க்கரீதியான காரணத்தையும் முன்வைக்கவில்லை. மேல்முறையீட்டாளர் தனது மேல்முறையீட்டில் முன்வைத்த பல காரணங்கள் எந்தவிதமான அடிப்படையையும் கொண்டிருக்கவில்லை.

6. எனவே, கொல்கத்தாவில் உள்ள கொல்கத்தா துறைமுக மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையின் தளபதி 27.11.2008 அன்று பிறப்பித்த தண்டனைத் தீர்ப்பில் தலையிட எந்த சூழ்நிலையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த 05.12.2008 தேதியிட்ட மேல்முறையீடு தகுதியற்றது என்பதால் நிராகரிக்கப்படுகிறது."

7. இதைத் தொடர்ந்து, சி.ஐ.எஸ்.எஃப் / என்.இ.எஸ் ஆய்வாளர் தலைவர் அலுவலகத்தில் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு, 19.05.2009 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது, மற்றவற்றுடன் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன;

தன்னைக் குற்றமற்றவர் என்று நிரூபிப்பதற்கான அனைத்து நியாயமான வாய்ப்புகளும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன; எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கை விசாரணை அதிகாரி அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் தரப்பில் ஒழுங்குமுறை விசாரணை நடத்துவதில் எந்த நடைமுறை முறைகேடுகளும் இல்லை மற்றும் இயற்கை நீதியின் கோட்பாடுகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

8. ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையத்தின் உத்தரவுகளை உறுதிப்படுத்தும் வகையில் சீராய்வு ஆணையம் பிறப்பித்த உத்தரவால் அதிருப்தியுற்ற எதிர்மேல்முறையீட்டாளர், கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு (நீ) எண் 14102/2009 என்று எண்ணிடப்பட்ட நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார். மேற்படி மனு கற்றறிந்த தனி நீதிபதியால் 25.06.2018 தேதியிட்ட ஆணையின்படி தள்ளுபடி செய்யப்பட்டு, எதிர்மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட பணிநீக்க தண்டனையானது கட்டாய ஓய்வு என்ற அடிப்படையில் முதன்மையாக மாற்றப்பட்டது, மேலும், வழக்கு தொடர்பான ஆவணங்களை பாதுகாக்க அதிகாரிகள் தவறிவிட்டனர் மற்றும் விசாரணையின் முக்கிய ஆவணங்களில் ஒன்றான, எதிர்மேல்முறையீட்டாளர் தனது முன்னவரிடம் பொறுப்பை ஒப்படைத்த நேரம் மற்றும் சம்பவ இடத்திலேயே கிடைக்கப்பெற்ற பொருட்கள் ஆகியவற்றை பதிவு செய்த காவல்முறைப் புத்தகத்தையும் ஆய்வு செய்ய வேண்டியிருந்தது. நீதிப்பேராணை மனுவின் நிலுவை நிலையைக் கருத்தில் கொண்டு அதிகாரிகள் விசாரணை பதிவுகளை

வைத்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட கற்றறிந்த தனி நீதிபதி, எதிர்மேல்முறையீட்டாளர் மீது விதிக்கப்பட்ட பணிநீக்கம் என்ற தண்டனையை நீக்கறவு செய்து, 27.11.2008 முதல் அனைத்து பயன்களுடன் சேர்ந்த கட்டாய ஓய்வு என்று மாற்றியமைத்து உத்தரவிட்டார்.

9. எதிர்மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட பணிநீக்க தண்டனையை கட்டாய ஓய்வு என்று மாற்றியமைத்து நீக்கறவு செய்து இரத்து செய்து உத்தரவு பிறப்பித்த தனி நீதிபதியின் தீர்முடிவுக்கெதிராக மேல்முறையீட்டாளர்களான இந்திய ஒன்றியம் இரண்டு விதமான மேல்முறையீடுகளை தாக்க செய்தது மேல்முறையீடுகளில் (எஃப்.எம்.ஏ.எண்.679/2019 மற்றும் எஃப்.எம்.ஏ.எண்.680/2019), அவை நீதியர் அமர்வால் 09.09.2021 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் மூலம் முடித்து வைக்கப்பட்டது. அதற்கு பதிலாக, எதிர்மேல்முறையீட்டாளர் பணிநீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து முழு ஊதியத்துடன் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு உரிமை உண்டு என்று உத்தரவிடப்பட்டது. பணிநீக்கம், பணியிலிருந்து நீக்குதல் அல்லது கட்டாய ஓய்வு போன்ற தண்டனைகளைத் தவிர, பிரதிவாதியின் கவனக்குறைவு மற்றும் கடமை தவறுதலுக்கு ஏற்ப புதிய தண்டனை உத்தரவைப் பிறப்பிக்குமாறு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மேலும் அறிவுறுத்தப்பட்டது.

10. மேற்கண்ட தீர்ப்புரையை கேள்விக்குட்படுத்தி, தற்போதைய மேல்முறையீடுகள் மேல்முறையீட்டாளர்கள்– இந்திய ஒன்றியத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.பணி நீக்க தண்டனை நீக்கறவு செய்யப்பட்டு, எதிர்மேல்முறையீட்டாளரை பணியிலிருந்து கட்டாய ஓய்வு பெறுமாறு

உத்தரவிட்ட கற்றறிந்த தனி நீதிபதியின் தீர்ப்பில் நீதியர் அமர்வு தலையிட எந்தவொரு காரணமும் இல்லை என்ற வாதத்தில் அவரை மீண்டும் பணியமர்த்திய பிறகு, அவருக்கு புதிய தண்டனை உத்தரவை வழங்குமாறு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளால் மனக்குறையுற்ற எதிர்மேல்முறையீட்டாளர் சிறப்பு அனுமதி மூலம் மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

11. மேல்முறையீட்டாளர்கள்–இந்திய ஒன்றியம் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி ஆகான்ஷா கவுல், பி.சி.சதுர்வேதி –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் பலர் (1995) 6 எஸ்சிசி 749 என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள சட்டத்திற்கு முரணாக எதிர்மேல்முறையீட்டாளரை மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிட்டதன் மூலம் மேல்முறையீட்டு ஆணையமாக உயர் நீதிமன்றம் செயல்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார்; நீதித்துறை மறுஆய்வின் கீழ் உயர்நீதிமன்றம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியபோது, மேல்முறையீட்டு ஆணையத்தின், முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் குறித்து தனிப்பட்ட முடிவுகளை எடுக்க ஆதாரங்களை மறுபரிசீலனை செய்யக்கூடாது; இயற்கை நீதி விதிமுறைகள் மீறப்பட்டதாகவோ அல்லது விசாரணை முறையான முறையில் நடத்தப்படவில்லை என்றோ அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் முடிவுகள் எந்த ஆதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்றோ எதிர்மேல்முறையீட்டாளரால் எந்த புகாரும் எழுப்பப்படவில்லை. தற்போதைய வழக்கில், விசாரணை ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியால்

நடத்தப்பட்டது என்றும் இயற்கை நீதியின் விதிகள் முறையாக பின்பற்றப்பட்டன என்றும் விசாரணை அதிகாரியால் கண்டுபிடிக்கப்பட்ட காண்முடிவுகள் போதுமான ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் வலியுறுத்தினார். எதிர்மேல்முறையீட்டாளர் எதிர்வாதம் செய்ய நியாயமான வாய்ப்பை வழங்கிய பின்னர், முறையாக நடத்தப்பட்ட துறை ரீதியான விசாரணையில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்ற பொருண்மையைக் கருத்தில் கொண்டு, கற்றறிந்த தனி நீதிபதி ஒழுங்குமுறை ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட பணி நீக்க தண்டனையை மாற்றியமைத்து மேல்முறையீட்டு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்டதற்கு எந்தவொரு சரியான காரணமும் இல்லை என்று குறிப்பிட்டு, நீதியர் அமர்வு மேலும் தலையிட்டு சாட்சியங்களை மறு மதிப்பீடு செய்து, எதிர்மேலமறையீட்டாளரை முழு ஊதியத்துடன் மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிட்டு, அதன் பின்னரே புதிய தண்டனைக்கான உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

12. ஒரிசா மாநிலம் மற்றும் பலர் –எதிர்– பித்யபூஷன் மொஹபத்ரா ஏஐஆர் 1963 எஸ்சி 779 என்ற வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டி, நிறுவப்பட்ட தவறான நடத்தையின் தீவிரத்தை மனதில் கொண்டு, ஒழுங்குமுறை ஆணையம் குற்றமிழைத்த அதிகாரிக்கு தண்டனை விதிக்கும் அதிகாரம் உள்ளது என்றும், அத்தகைய தண்டனை இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 226 இன் கீழ் உயர்நீதிமன்றத்தால் மறுஆய்வு செய்யப்படாது என்றும் கூறப்பட்டது. தனி குற்றச்சாட்டின் ஒரு பகுதியாக

ஆக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, தண்டனை உத்தரவு பிறப்பிக்கும்போது எதிர்மேல்முறையீட்டாளரின் கடந்தகால நடத்தையைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், மேல்முறையீட்டாளர்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மேற்கூறிய சமர்ப்பிப்புக்கு ஆதரவாக, கற்றறிந்த வழக்குரைஞர் மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை மற்றும் பலர் –எதிர்– அப்ரார் அலி (2017) 4 எஸ்சிசி 507 என்ற வழக்கை மேற்கோள் காட்டினார்.

13. எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ரஞ்சன் முகர்ஜி அளித்த ஒரே வாதம் என்னவென்றால், கற்றறிந்த தனி நீதிபதி, எதிர்மேல்முறையீட்டாளரை முழு நிலுவை ஊதியத்துடன் மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிட்டுள்ளதால், நீதியர் அமர்வு எதிர்மேல்முறையீட்டாளரின் அலட்சியம் மற்றும் கடமை தவறுதலுக்கு ஈடாக ஒழுங்குமுறை ஆணையத்தால் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பது நியாயமானதல்ல என்பதாகும். அதற்கு பதிலாக, மேல்முறையீட்டாளர்கள் – இந்திய ஒன்றியதால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும், அப்படி இருந்திருந்தால், கற்றறிந்த தனி நீதிபதியால் விதிக்கப்பட்ட கட்டாய ஓய்வு தண்டனை மீட்டெடுக்கப்பட்டு இறுதி நிலையை அடைந்திருக்கும், இதன் மூலம் எதிர்மேல்முறையீட்டாளர் தனது ஓய்வு காலப் பலன்களைக் கோர உரிமை உண்டு.

14. இந்த வழக்கின் பொருண்மைகளின்படி, தனி நீதிபதியும், நீதியர் அமர்வும், ஒழுங்குமுறை ஆணையத்தால் எதிர்மேல்முறையீட்டாளரின் மீது விதிக்கப்பட்ட தண்டனையில் தலையிட்டிருக்க வேண்டுமா என்பதும்,

அதனை மேல்முறையீட்டு ஆணையமும், சீராய்வு ஆணையமும் அதை உறுதி செய்திருக்க வேண்டுமா என்பதே நமது பரிசீலனைக்கு எழுகிறது.

15. துறை ரீதியான விசாரணையில் பதிவுசெய்யப்பட்ட பொருண்மைகளின் காண்முடிவுகள், முரண்பட்டோ அல்லது பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களுடன் முற்றிலும் பொருந்தாத சூழ்நிலைகளிலோ நீதிமன்றங்கள் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பது நன்கு தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். இருப்பினும், இயற்கை நீதிக் கோட்பாடுகள் மீறப்பட்டாலோ அல்லது சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் தவறான நோக்கங்கள் இருந்தாலோ, நீதிமன்றங்கள் நிச்சயமாக தலையிட முடியும்.

16. மேற்கண்ட சூழலில், மேற்படி பி.சி.சதுர்வேதி வழக்கில் இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு கூறிய கருத்துக்கள் பின்வருமாறு :–

> "12. நீதித்துறை மறுஆய்வு என்பது ஒரு தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீடு அல்ல, மாறாக தீர்ப்பு வழங்கப்பட்ட முறையை மறுஆய்வு செய்வதாகும். நீதித்துறை மறு ஆய்வின் அதிகாரம் என்பது தனிநபர் நியாயமாக நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கானதே தவிர, நீதிமன்றத்தின் பார்வையில் அந்த அதிகாரி அடையும் முடிவு அவசியம் சரியானதாக இருப்பதை உறுதி செய்வதல்ல. ஒரு அரசு ஊழியர் தவறாக நடந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டதன்

அடிப்படையில் விசாரணை நடத்தப்படும்போது, விசாரணை ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியால் நடத்தப்பட்டதா அல்லது இயற்கை நீதி விதிகளுக்கு இணங்கப்பட்டதா என்பதை தீர்மானிப்பதே நீதிமன்றம்/தீர்ப்பாயத்தின் நோக்கம் ஆகும். விசாரணை நடத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிக்கு விசாரணை தீர்முடிவுகள் அல்லது முடிவுகள் சில ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும், பொருண்மை நிலை அல்லது கண்டறிவதற்கான அதிகார வரம்பு, அதிகாரம் மற்றும் ஆணையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஆனால் அந்த காண்முடிவு சில ஆதாரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். சாட்சியச் சட்டத்தின் தொழில்நுட்ப விதிகளோ அல்லது அதில் வரையறுக்கப்பட்டுள்ளபடி பொருண்மை அல்லது சான்றின் நிரூபணமோ ஒழுங்கு நடவடிக்கைக்குப் பொருந்தாது. சான்று மற்றும் முடிவு அதிலிருந்து ஆதரவைப் பெறுகிறது என்பதை ஆணையம் ஏற்றுக்கொண்டால், குற்றமிழைத்த அதிகாரி குற்றச்சாட்டில் குற்றவாளி என்று கருதுவதற்கு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு உரிமை உண்டு. நீதிமன்றம்/தீர்ப்பாயம் தனது நீதித்துறை மறு ஆய்வு

அதிகாரத்தில் சாட்சியங்களை மறுபரிசீலனை செய்வதற்கும் ஆதாரங்களின் மீது தனது சொந்த சுயாதீனமான முடிவுகளுக்கு வருவதற்கும் மேல்முறையீட்டு ஆணையமாக செயல்படாது. இயற்கை நீதி விதிகளுக்கு முரணான முறையில் அல்லது விசாரணை முறையை பரிந்துரைக்கும் சட்ட விதிகளை மீறும் வகையில் அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தால் எட்டப்பட்ட முடிவு அல்லது காண்முடிவு எந்த ஆதாரத்தையும் அடிப்படையாகக் கொள்ளாத போது நீதிமன்றம் / தீர்ப்பாயம் தலையிடலாம். எந்த நியாயமான நபரும் ஒருபோதும் எட்டாத முடிவு அல்லது காண்முடிவு இருந்தால், நீதிமன்றம் / தீர்ப்பாயம் முடிவு அல்லது காண்முடிவில் தலையிடலாம், மேலும் ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளுக்கும் பொருத்தமானதாக இருக்கும் வகையில் நிவாரணத்தை உருவாக்கலாம்.

13. ஒழுங்குமுறை ஆணையம் மட்டுமே பொருண்மைகளை விசாரிக்கும் ஒரே நீதிபதி. மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும்போது, சாட்சியம் அல்லது தண்டனையின் தன்மையை மறுபரிசீலனை செய்ய மேல்முறையீட்டு ஆணையத்திற்கு இணை அதிகாரம் உள்ளது.

ஒழுங்குமுறை விசாரணையில், சட்டப்பூர்வ ஆதாரங்கள் மற்றும் அந்த ஆதாரங்களில் கண்டறிதல்கள் ஆகியவற்றின் கடுமையான நிரூபணம் பொருத்தமற்றது. போதுமான சான்றுகள் அல்லது ஆதாரங்களின் நம்பகத்தன்மை நீதிமன்றம்/தீர்ப்பாயத்தின் முன் வாதிடப்படுவதை அனுமதிக்க முடியாது. யூனியன் ஆஃப் இந்தியா எதிர் எச்.சி.கோயல் (1964) 4 எஸ்.சி.ஆர் 718 என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் ப.728 இல், ஒழுங்குமுறை அதிகாரியால் எட்டப்பட்ட சான்றுகளைக் கருத்தில் கொண்டு, முடிவு தவறாக இருந்தால் அல்லது பதிவின் மாறுபாடு காப்புரிமை பிழையால் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது எந்த ஆதாரத்தின் அடிப்படையிலும் இல்லையென்றால், நெறிமுறைப்படுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படலாம் என்று குறிப்பிட்டது.

Xxx xxx xxx

Xxx xxx xxx

18. மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டை மறுஆய்வு செய்வது, ஒழுங்குமுறை ஆணையமும், மேல்முறையீட்டில் மேல்முறையீட்டு ஆணையமும், பொருண்மை கண்டறியும் அதிகாரிகளாக இருப்பதால், ஒழுக்கத்தை பராமரிக்கும் நோக்கில்

ஆதாரங்களை பரிசீலிக்க பிரத்யேக அதிகாரம் உள்ளது என்பதை நிறுவும். தவறான நடத்தையின் அளவு அல்லது தீவிரத்தை கருத்தில் கொண்டு பொருத்தமான தண்டனையை விதிக்க அவர்களுக்கு விருப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம்/தீர்ப்பாயம், நீதித்துறை மறு ஆய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, பொதுவாக தண்டனை குறித்த தனது சொந்த முடிவை மாற்றி வேறு சில தண்டனைகளை விதிக்க முடியாது. ஒழுங்குமுறை ஆணையத்தால் அல்லது மேல்முறையீட்டு ஆணையத்தால் விதிக்கப்பட்ட தண்டனை உயர்நீதிமன்றம் / தீர்ப்பாயத்தின் உளச்சான்றை பாதித்தால், அது நிவாரணத்தை பொருத்தமாக உருவாக்கும், விதிக்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்யுமாறு ஒழுங்குமுறை / மேல்முறையீட்டு ஆணையத்திற்கு அறிவுறுத்தும், அல்லது வழக்கைக் குறைக்கும், விதிவிலக்கான மற்றும் அரிதான சந்தர்ப்பங்களில், அதற்கு ஆதரவாக உறுதியான காரணங்களுடன் பொருத்தமான தண்டனையை விதிக்கலாம்."

[முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது]

17. ஸ்டேட் பாங்க் ஆப் பிகானீர் மற்றும் ஜெய்ப்பூர் –எதிர்– நேமி சந்த் நல்வாயா (2011) 4 எஸ்சிசி 584 என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு கருத்துரைத்தது பின்வருமாறு :–

> "7. நீதிமன்றங்கள் ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாக செயல்படாது மற்றும் துறைசார்ந்த விசாரணையில் கொண்டு வரப்பட்ட ஆதாரங்களை மறு மதிப்பீடு செய்யாது, பதிவு செய்யப்பட்ட பதிவாவணங்களில் வேறுபட்ட பார்வை சாத்தியம் என்ற அடிப்படையில் தலையிடாது என்பது இப்போது நன்கு நிறுவப்பட்டுள்ளது. விசாரணை நியாயமானதாகவும் முறையாகவும் நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தால், ஆதாரங்களின் போதுமான தன்மை அல்லது ஆதாரங்களின் நம்பகத்தன்மை ஆகியவை துறை விசாரணைகளின் முடிவுகளில் தலையிடுவதற்கான காரணங்களாக இருக்காது. அத்தகைய தகவல்கள் எந்தவொரு ஆதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை அல்லது அவை வெளிப்படையாக தவறானவை என்று இருந்தால் தவிர, துறைசார் விசாரணைகளில் பதிவு செய்யப்பட்ட பொருண்மையின் காண்முடிவுகளில் நீதிமன்றங்கள் தலையிடாது. ஒரு தீர்ப்பாயம் நியாயமான முறையில் செயற்பட்டிருந்தால், பதிவு

செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அத்தகைய முடிவுக்கு அல்லது காண்முடிவுக்கு வந்திருக்க முடியுமா என்பதைக் கண்டறிவதே, தவறான தன்மையைக் கண்டறிவதற்கான சோதனையாகும். எனினும், இயற்கை நீதிக் கோட்பாடுகள் அல்லது சட்டரீதியான விதிமுறைகள் மீறப்பட்டிருந்தாலோ அல்லது அந்த உத்தரவு தன்னிச்சையானதாகவோ, மனம் போன போக்கில் அமைந்ததாகவோ அல்லது அல்லது புறநிலைக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டால், நீதிமன்றங்கள் ஒழுங்குமுறை வழக்குகளின் காண்முடிவுகளில் தலையிடும். (பார்க்க பி.சி. சதுர்வேதி –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் பலர் (1995) 6 எஸ்சிசி 749, இந்திய ஒன்றியம் –எதிர்– ஜி.ஞானாயுதம் (1997) 7 எஸ்.சி.சி 463, பாங்க் ஆப் இந்தியா –எதிர்– தேகல சூரியநாராயணா (1999) 5 எஸ்.சி.சி 762 மற்றும் பாம்பே உயர்நீதிமன்றம் –எதிர்– சசிகாந்த் எஸ்.பாட்டீல் (2000) 1 எஸ்சிசி 416).

[முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது]

18. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், வி.எஸ்.பி. மற்றும் பலர் – எதிர்– கோபராஜு ஸ்ரீ பிரபாகர ஹரிபாபு (2008) 5 எஸ்சிசி 569 என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு, ஒழுங்குமுறை

ஆணையத்தால் வழங்கப்பட்ட தண்டனை உத்தரவின் விகிதாச்சார கோட்பாடு குறித்த பல முன்னுதாரணங்களை மேற்கோள் காட்டி, பின்வருமாறு கருத்துரைத்தது :–

> "21. அனைத்து நடைமுறைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று கண்டறியப்பட்டவுடன், ஒரு குற்றமிழைத்த ஊழியருக்கு விதிக்கப்படும் தண்டனையின் அளவு குறித்து நீதிமன்றங்கள் சாதாரணமாக தலையிடாது. சில வழக்குகளில் மட்டுமே உயர் நீதிமன்றங்கள் விகிதாச்சாரக் கோட்பாட்டைப் பயன்படுத்த முடியும். ஒரு பணியமர்த்துநரின் முடிவானது சட்ட அளவுருக்களுக்குள் இருப்பதாகக் கண்டறியப்பட்டாலோ அல்லது தவறான நடத்தை நிரூபிக்கப்பட்டாலோ, அதிகார வரம்பு பொதுவாக பயன்படுத்தப்படாது."

19. இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 226/227 இன் கீழ் உயர்நீதிமன்றம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டிய பரந்த அளவுருக்கள் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தொடர்பான விஷயங்களை வகுத்து, இந்திய ஒன்றியம் மற்றும் பலர் –எதிர்– பி.குணசேகரன் (2015) 2 எஸ்சிசி 610 என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு பின்வருமாறு தீர்ப்பளித்தது :–

> "12. நன்கு நிலைநிறுத்தப்பட்ட நிலையிலும், ஒழுங்குமுறை நடவடிக்கைகளில் உயர்நீதிமன்றம்

மேல்முறையீட்டு ஆணையமாக செயல்பட்டு, விசாரணை அதிகாரியின் முன் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களை கூட மறுபரிசீலனை செய்திருப்பது வேதனையளிக்கிறது. குற்றச்சாட்டு –I இன் மீதான காண்முடிவு ஒழுங்குமுறை ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ஒழுங்குமுறை நடவடிக்கைகளில், உயர் நீதிமன்றம் முதல் மேல்முறையீட்டின் இரண்டாவது நீதிமன்றமாக செயல்பட முடியாது. உயர்நீதிமன்றம், இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 226/227 இன் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆதாரங்களை மறுபரிசீலனை செய்ய முயற்சிக்கக்கூடாது. உயர்நீதிமன்றம் பின்வருவனவற்றை மட்டுமே மறுபரிசீலனை செய்ய முடியும் :–

(அ) விசாரணை ஒரு தகுதிவாய்ந்த ஆணையத்தால் நடத்தப்படுகிறது;

(ஆ) விசாரணை அந்த நோக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு ஏற்ப நடத்தப்படுகிறது;

(இ) வழக்குகளை நடத்துவதில் இயற்கை நீதியின் கொள்கைகள் மீறப்பட்டுள்ளன;

(ஈ) வழக்கின் ஆதாரங்கள் மற்றும் தகுதிக்கு புறம்பான சில கருத்தாய்வுகளால் அதிகாரிகள் ஒரு நியாயமான முடிவுக்கு வருவதைத் தடுத்திருக்கிறார்கள்;

(உ) அதிகாரிகள் பொருத்தமற்ற அல்லது புறநிலைக் கருத்தாய்வுகளால் பாதிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்;

(ஊ) மேலோட்டமாகப் பார்த்தால், இந்த முடிவு முற்றிலும் தன்னிச்சையானதாகவும், மனம்போன போக்கில் இருப்பதாகவும், பகுத்தறிவுள்ள எந்த நபரும் அத்தகைய முடிவுக்கு ஒருபோதும் வந்திருக்க முடியாது;

(எ) ஒழுங்குமுறை அதிகாரி தவறுதலாக ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் பொருள் ஆதாரங்களை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டார்;

(ஏ) ஒழுங்குமுறை ஆணையம் காண்முடிவில் தாக்கத்தை ஏற்படுத்திய அனுமதிக்கப்படாத ஆதாரங்களை தவறாக ஒப்புக் கொண்டது;

(ஐ) பொருண்மையின் காண்முடிவு எந்த ஆதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

13. இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 226/227 இன் கீழ், உயர் நீதிமன்றம் செய்யக்கூடாதவை :–

(i) சாட்சியங்களை மறுபரிசீலனை செய்தல்;

(ii) விசாரணை சட்டத்தின்படி நடத்தப்பட்டால், விசாரணையின் காண்முடிவுகளில் தலையிடுவது;

(iii) சான்றுகளின் போதுமான தன்மை பற்றி விவாதிக்க வேண்டும்;

(iv) ஆதாரங்களின் நம்பகத்தன்மையை குறித்து விவாதித்தல்;

(v) காண்முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட சில சட்ட சான்றுகள் இருந்தால் தலையிடலாம்.

(vi) பொருண்மையின் பிழையை அது எவ்வளவு கடுமையானதாகத் தோன்றினாலும் சரி செய்யவேண்டும்;

(vii) அவரது உளச்சான்றை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை என்றால், தண்டனையின் விகிதாசாரத்தன்மையைப் குறித்து விவாதிக்கலாம்."

20. இந்திய ஒன்றியம் மற்றும் பலர் –எதிர்– முன்னாள் காவலர் ராம் கரண் (2022) 1 எஸ்சிசி 373 என்ற வழக்கில், இ நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு பின்வரும் பொருத்தமான கருத்துரைகளை முன்வைத்தது :–

"23. சட்டத்தில் நன்கு வேரூன்றியுள்ள கோட்பாடு என்னவென்றால், ஒழுங்குமுறை ஆணையம் அல்லது மேல்முறையீட்டில் மேல்முறையீட்டு ஆணையம்தான், குற்றமிழைத்த பணியாளருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனையின் தன்மை குறித்து தீர்மானிக்க வேண்டும். அத்தகைய ஊழியர் செய்த தவறான நடத்தையின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, ஒழுங்குமுறை அதிகாரியின் செயல்பாட்டை நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்ள முடியாது.

24. ஒழுங்குமுறை ஆணையத்தால் விதிக்கப்பட்ட தண்டனை நீதிமன்றத்தின் மனசாட்சிக்கு அதிர்ச்சிகரமானதாகக் கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட, ஒழுங்குமுறை ஆணையத்தை அல்லது மேல்முறையீட்டு ஆணையத்தை தண்டனை விதிக்கும் கேள்வியை மறுபரிசீலனை செய்ய அறிவுறுத்த வேண்டும். தண்டனையின் அளவு குறித்த நீதித்துறை மறுஆய்வின் நோக்கமமானது வரையறுக்கப்பட்ட நோக்கத்துடன் உள்ளது. விதித்த தண்டனை தவறான நடத்தையின் தன்மைக்கு அதிர்ச்சியூட்டும் வகையில் பொருத்தமற்றதாகத் தோன்றும் போது மட்டுமே நீதிமன்றங்கள் இதைக்

கண்டுகொள்வதில்லை. இதுபோன்ற சந்தர்ப்பத்தில் கூட, தண்டனை உத்தரவை நீக்கறவு செய்தபின், இது ஒழுங்குமுறை / மேல்முறையீட்டு ஆணையத்திற்கு மறுவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும், மேலும் தண்டனையின் அளவை விதிப்பதன் மூலம் நீதிமன்றம் தனது முடிவை மாற்றக்கூடாது. எனினும், அரிதான மற்றும் விதிவிலக்கான நேர்வுகளில் மட்டுமே, நீதிமன்றம், வழக்கை சுருக்கி, தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்படும் தண்டனைக்குப் பதிலாக, தண்டனையின் அளவு குறித்து உறுதியான காரணங்களைக் கூறிய பிறகு, தனது சொந்தக் கருத்தை மாற்ற நினைக்கலாம்."

21. மேற்படி ஒரிசா மாநிலம் மற்றும் பலர் வழக்கில் இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு, பணிநீக்க உத்தரவு எதிர்மேல்முறையீட்டாளரின் பெரும் குற்றத்தின் முதன்மையான குற்றத்தை நிறுவும் காண்முடிவுகளின் அடிப்படையில் இருந்தால், உயர்நீதிமன்றம் விதிக்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்ய உத்தரவிட முடியாது என்று குறிப்பிட்டது. குற்றத்தின் தீவிரத்தன்மை உறுதி செய்யப்பட்டு, நடத்தப்பட்ட விசாரணை விதிமுறைகளுக்கு ஏற்ப அமைந்திருப்பதாகவும், விதிமுறைகளின் கீழ் பரிசீலிக்கப்பட்ட நியாயமான வாய்ப்பை குற்றமிழைத்த ஊழியருக்கு வழங்கியுள்ளதாகவும் கண்டறியப்பட்டால், விதிக்கப்பட்ட தண்டனை நீதிமன்றத்தால் நீதித்துறை

மறுஆய்வுக்கு உட்படாது. ஒழுங்குமுறை ஆணையத்தின் முடிவுக்கு வருவதற்கு சில ஆதாரங்கள் இருந்த வரை, அத்தகைய உத்தரவு மறுக்க முடியாததாக மாறும், மேலும் உயர் நீதிமன்றம் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். மேற்கண்ட கருத்து இந்திய ஒன்றியம் –எதிர்– சர்தார் பகதூர் (1972) 4 எஸ்சிசி 618 என்ற வழக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

22. சட்ட நிலைப்பாட்டைச் சுருக்கமாகச் சொல்வதென்றால், பொருண்மையைக் கண்டறியும் ஆணையங்களாக இருப்பதால், ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையம் ஆகிய இரண்டுக்கும் விசாரணை அறிக்கையின் ஒரு பகுதியாக உள்ள சாட்சியங்களை ஆய்வு செய்வதற்கான தனிப்பட்ட அதிகாரம் உள்ளது. துறை ரீதியான விசாரணையின் போது போதுமான மற்றும் நம்பகமான ஆதாரங்கள் இருப்பதைக் கண்டறிந்தால், ஒழுங்குமுறை ஆணையம் தவறான நடத்தைகளின் தீவிரத்தை மனதில் கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட பணியாளருக்கு பொருத்தமான தண்டனையை விதிக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. எனினும், நீதித்துறை மறுஆய்வு அதிகாரங்களை பயன்படுத்தி, உயர்நீதிமன்றம் அல்லது அந்த வழக்கில், தீர்ப்பாயம், விதித்த தண்டனையைப் பற்றி அதன் சொந்த முடிவுக்கு வருவதற்கு ஆதாரங்களை மறுபரிசீலனை செய்ய முடியாது, மேற்படி பி.குணசேகரன் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உயர் நீதிமன்றம்/தீர்ப்பாயமானது, விதிக்கப்பட்ட தண்டனை குற்றத்திற்கு மிகவும் ஏற்றதாக இல்லாத வரையிலோ அல்லது பிற காரணங்களுக்காக குறைபாடுகள் இருப்பதாகக் கண்டறியப்படும் வரையிலோ விதிக்கப்பட்ட தண்டனையைப் பொறுத்தமட்டில் அதன் சொந்த முடிவுக்கு வருவதற்கான

ஆதாரங்களை சாதாரணமாக மறுமதிப்பீடு செய்ய முடியாது. குற்றம் சாட்டப்பட்ட ஊழியருக்கு விதிக்கப்படும் தண்டனை உயர்நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தின் உளச்சான்றை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் இருந்தால், ஒழுங்குமுறை/மேல்முறையீட்டு ஆணையம் விதிக்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்ய மீண்டும் விசாரிக்கலாம். குறிப்பிடப்பட வேண்டிய விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே, உயர்நீதிமன்றம் / தீர்ப்பாயம் அதற்கான சரியான காரணங்களை வழங்கிய பின்னர், பொருத்தமான தண்டனையை விதிக்க முடிவு செய்ய வேண்டும்.

23. தற்போதைய வழக்கில் மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தி, ஒழுங்குமுறை ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பொருண்மைகளின் காண்முடிவுகளில் உயர்நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். அலி.ஃப் நகர் ஸ்கிராப் யார்டில், 07.11.2007 அன்று பின்னிரவு முதல் 08.11.2007 அதிகாலை வரை தனது பாதுகாப்பின் கீழ் இருந்த 800 கிலோ செப்புக் கம்பிகள் திருடப்படுவதைத் தடுக்கத் தவறியதற்காக எதிர்மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு–1 அலட்சியம் மற்றும் கடமை தவறியது தொடர்பானது. எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டு விதிகள்–I நிரூபிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வருவதற்கு ஆவண மற்றும் சூழ்நிலை சான்றுகளின் அடிப்படையில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்திய எட்டு அரசுத் தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்கள் உட்பட பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஒழுங்குமுறை ஆணையம் நுணுக்கமாக ஆராய்ந்துள்ளது என்பதை பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. இதேபோல்,

எதிர்மேல்முறையீட்டாளர் எந்தவொரு எதிர்தரப்பு சான்றுரையையும் முன்வைக்கவில்லை, மேலும் அவர் முன்வைத்த ஆவணங்கள் அவருக்கு ஆதரவாக எதையும் நிரூபிக்கவில்லை.

24. எதிர்மேல்முறையீட்டாளர் தனது வாதத்தில், அவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் 08.11.2007 அன்று 15:30 மணியளவில் அவர் பணியில் இல்லாதபோது சம்பவம் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேலும் அவ்ரது கூற்று ஒழுங்குமுறை அதிகாரியால் கவனமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டது என்றும், வணிக வாகனத்தில் ஏற்றப்பட்ட செப்புக் கம்பிகளை மீட்ட காவல் நிலைய அலுவலக பொறுப்பாளர் சமர்ப்பித்த புகாரின் அடிப்படையில் வெஸ்ட் போர்ட் காவல் நிலையத்தால் தானாக முன்வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு காவல் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார். 08.11.2007 அன்று 15:15 மணிக்கு புகார்தாரரால் செப்புக் கம்பிகள் மீட்கப்பட்டதாகவும், முதல் தகவல் அறிக்கையில் 08.11.2007 அன்று 22:00 மணி நேரமாகவும், திருட்டு நடந்த நேரம் 15:30 மணி நேரமாகவும் காட்டப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் உள்ள முரண்பாடுகள் அ.சா–1, அ.சா–2 மற்றும் அ.சா–8 ஆகியோரின் வாக்குமூலங்களுடன் முரண்படுவதைக் குறிப்பிட்டு, 08.11.2007 அன்று 22:00 மணிக்கு திருட்டு பற்றிய தகவல் பெறப்பட்டதாகக் கூறிய ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி, எதிர்மேல்முறையீட்டாளரின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று நிராகரித்தார், மேலும் 7 / 8.11.2007 நள்ளிரவு எதிர்மேல்முறையீட்டாளர் பணியிலிருந்தபோது செப்புக் கம்பிகள் திருடப்பட்டது என்பதை ஆதாரங்கள் நியாயமாக நிறுவியுள்ளன என்று

தீர்ப்பளித்தார். அதன்படி, எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டு–1 நிரூபிக்கப்பட்டதாக ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்தது.

25. குற்றச்சாட்டு–II ஐப் பொறுத்தவரை, எதிர்மேல்முறையீட்டாளர் தொடர்பான பணி ஆவணங்களின் நகல்களை நிரூபிக்க அழைக்கப்பட்ட எஸ்ஐ/மின். ஏ.கே.துவா(அ.சா–4) அவர்களின் அறிக்கையை ஒழுங்கு நடவடிக்கை ஆணையம் கவனித்தது, மேலும் மேற்படி ஆவண ஆதாரங்களை ஆராய்ந்தபோது, பல்வேறு குற்றங்களுக்காக பதின்மூன்று வருட பணிக் காலப்பகுதியில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எட்டு தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும், ஆனால் அப்போதும் அவர் தன்னைத் திருத்திக் கொள்ள முயற்சி செய்யவில்லை என்றும் குறிப்பிட்டது. கடந்த காலங்களில் தொடர்ச்சியாக தவறாக நடந்து கொண்டதையும், 800 கிலோ எடையுள்ள செப்பு கம்பிகள் திருடப்பட்டதையும் கருத்தில் கொண்டு, குற்றச்சாட்டு–I இன்படி ஒழுங்குமுறை ஆணையம், எதிர்மேல்முரையீட்டாளர் ஒழுங்குமுறை படையில் பணியாற்ற தகுதியற்றவர் என்று கருதி, அவரை பணியிலிருந்து நீக்க உத்தரவிட்டது.

26. ஒழுங்குமுறை ஆணையத்தின் காண்முடிவுகள் மேல்முறையீட்டு ஆணையம் மற்றும் சீராய்வு ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நாம் மேலே குறிப்பிட்டோம். எனினும், விசாரணை அதிகாரியின் முன் சமர்ப்பிக்கப்பட்ட காவல்முறைப் புத்தகத்தின் சாராம்சம் மற்றும் அந்த ஆவணத்தை எதிர்மேல்முறையீட்டாளர் ஒப்புக் கொண்டிருப்பது ஆகியவற்றின் அடிப்படையில், அசல் பதிவு, குறிப்பாக, காவல்முறைப் புத்தகம்

கிடைக்கவில்லை என்ற ஒரே காரணத்தால், பணியிலிருந்து பணிநீக்கம் செய்வதற்கான உத்தரவை கற்றறிந்த தனி நீதிபதி நீக்கறவு செய்து, அதை கட்டாய ஓய்வாக மாற்றினார். விசாரணை அதிகாரியின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஒரே ஆவணம் காவல்முறைப் புத்தகம் அல்ல என்ற பொருண்மையையும் கற்றறிந்த தனி நீதிபதி புறக்கணித்தார். எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காக துறையினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் மேற்படி சாட்சிகள் துறையின் கூற்றை உறுதிப்படுத்தியுள்ளனர். இயற்கை நீதி விதிகளை மீறியதால் துறை ரீதியான விசாரணை சீர்குலைக்கப்பட்டது என்றோ, சட்ட விதிகளை மீறி விசாரணை நடத்தப்பட்டது என்றோ கற்றறிந்த தனி நீதிபதி எந்த நிலையிலும் கருத்து தெரிவிக்கவில்லை.

27. நீதியர் அமர்வு ஒரு படி மேலே சென்று, சாட்சியங்களை மறுபரிசீலனை செய்து, அசல் காவல்துறைப் புத்தகம் தயாரிக்கப்படாதது குறித்து கற்றறிந்த தனி நீதிபதியின் கருத்து ஏற்கத்தக்கதல்ல என்று கூறிய போதிலும், 42 கட்டுகள் கொண்ட 800 கிலோ செப்புக் கம்பிகளை உள்ளடக்கிய இவ்வளவு பெரிய திருட்டு "கண் இமைக்கும் நேரத்தில்" நடந்திருக்க முடியும் என்ற முடிவுக்கு வர முடியவில்லை என்று குறிப்பிட்டது. திருட்டில் உடந்தையாக இருந்தார் என்று எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டு ஊகிக்கத்தக்கது என்றும், எதிர்மேல்முறையீட்டாளரின் பணிக்காலத்தில் மட்டுமே இவ்வளவு பெரிய அளவிலான திருட்டு நடந்திருக்க முடியும் என்ற முடிவுக்கு வர போதுமான ஆதாரங்கள் இல்லை என்றும் நீதிமன்றம்

கருதியது, இருப்பினும் எதிர்மேல்முறையீட்டாளரின் தரப்பில் அலட்சியம் மற்றும் கடமை தவறுதல் தொடர்பான குற்றச்சாட்டு–1 நிலைநிறுத்தப்பட்டது. அதே நேரத்தில், கற்றறிந்த தனி நீதிபதி, பணிநீக்கம் என்ற தண்டனைக்குப் பதிலாக கட்டாய ஓய்வு என்ற தண்டனையை வழங்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு, எதிர்மேல்முறையீட்டாளரை முழு நிலுவை ஊதியத்துடன் மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிடப்பட்டது, அதே நேரத்தில், பணிநீக்கம் அல்லது பணியிலிருந்து நீக்குதல் அல்லது கட்டாய ஓய்வு போன்ற தண்டனைகளைத் தவிர ஒழுங்குமுறை அதிகாரிக்கு எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் அலட்சியம் மற்றும் கடமை தவறியதற்கு ஏற்ப புதிய தண்டனை உத்தரவு பிறப்பிக்க சுதந்திரம் வழங்கப்பட்டது.

28. கற்றறிந்த தனி நீதிபதி மற்றும் நீதியர் அமர்வின் அணுகுமுறையை எங்களால் ஏற்க முடியவில்லை. விசாரணை அதிகாரியின் முன் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் தொடர்பான பொருண்மை குறித்த அம்சங்களை உயர்நீதிமன்றம் விசாரிப்பதற்கு சரியான காரணம் எதுவும் இல்லை. இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 226 இன் கீழ், உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட நீதித்துறை மறுஆய்வு அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் அனுமதிக்கப்படாத சாட்சியத்தை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு முயற்சி இது என்பது தெளிவாகிறது. தனி நீதிபதி மற்றும் நீதியர் அமர்வு ஆகிய இருவரும், ஒழுங்குமுறை ஆணையத்தால் எதிர்மேல்முறையீட்டாளர் மீது விதிக்கப்பட்ட மற்றும் மேல்முறையீட்டு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பணிநீக்க

உத்தரவை நீக்கறவு செய்ததன் மூலம் பிழை புரிந்துள்ளனர் என்று நாங்கள் கருதுகிறோம்.

29. எதிர்மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ஆகிய இரண்டையும் பொறுத்தவரை, மேல்முறையீட்டு ஆணையத்தால் முறையாக ஏற்கப்பட்டு, சீராய்வு ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் தீர்முடிவுகளுடன் நாங்கள் முழுமையாக உடன்படுகிறோம். எதிர்மேல்முறையீட்டாளர் ஒழுங்குமுறைப் படை உறுப்பினராக இருப்பதால், அவர் தனது கடமையை விடாமுயற்சியுடன் நிறைவேற்றியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவரது கவனக்குறைவு மற்றும் கடமை தவறியதன் விளைவாக அவர் பணியாற்றிய இடத்திலிருந்து 800 கிலோ செப்புக் கம்பிகள் திருடப்பட்டன. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர் பணியாற்றிய பதின்மூன்று வருட பணிக்காலத்தில், தனது குணங்களைத் திருத்திக் கொள்ளவில்லை என்றும், பல்வேறு குற்றங்களுக்காக எட்டு தண்டனைகள் வழங்கப்பட்டன என்றும் அவற்றில் மூன்று தண்டனைகளில் இரண்டு முறை ஊதிய உயர்வை ஓராண்டுக்கு நிறுத்துவது மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்த பலன்களும் இல்லாமல் இரண்டு ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வை நிறுத்துவது ஆகியவை அடங்கும் என்று பதிவேடுகளின் மூலம் வெளிப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலைகளில், எதிர்மேல்முறையீட்டாளர் ஆயுதப்படையில் தொடர்ந்து பணியாற்றுவது நிச்சயமாக சந்தேகத்திற்குரியது மற்றும் அவர் மீது பணியில் இருந்து நீக்கப்பட்டதற்கான தண்டனையை விதிக்கும் போது, அவரது கடந்தகால

நடத்தை தொடர்பாக ஒழுங்குமுறை ஆணையத்தின் வேறு கண்ணோட்டத்தை எதிர்பார்க்க முடியாது.

30. எனவே, 27.11.2008 நாளிட்ட உத்தரவில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, மேல்முறையீட்டு ஆணையத்தால் 03.02.2009 நாளிட்ட உத்தரவில் முறையாக உறுதி செய்யப்பட்டு, 19.05.2009 நாளிட்ட உத்தரவில் சீராய்வு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் தீர்முடிவுகளையும், காண்முடிவுகளையும் மீட்டளிக்கும் படி தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.14102(நீ)/2009 இல் கற்றறிந்த தனி நீதிபதியால் 25.06.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட எஃப்.எம்.ஏ எண்.679 / 2019 மற்றும் எஃப்.எம்.ஏ எண்.680/2019 ஆகியவற்றில் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு 09.09.2021 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்வதும், இரத்து செய்வதும் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. எங்களது கருத்துப்படி, எதிர்மேல்முறையீட்டாளரின் மீது விதிக்கப்பட்ட பணிநீக்கம் என்ற தண்டனையானது அவரது ஒட்டுமொத்த அலட்சியம் மற்றும் கடமை தவறியமைக்கு ஏற்ப உள்ளது.

31. இதன் விளைவாக, இந்திய ஒன்றியத்தால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மேல்முறையீடுகளும் (மேல்முறையீடு (உ) எண்கள்.3524–25/2022 சிறப்பு அனுமதி மனுக்களிலிருந்து எழுகின்றன) அனுமதிக்கப்படுகின்றன மற்றும் தனிப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனுக்களான மேல்முறையீடு (உ) எண்கள்.11021–22/2022 ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகின்றன, அதே

நேரத்தில் தரப்பினர்களுக்கான சொந்த செலவுகளை தாங்களே ஏற்குமாறு உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீடுகள் தீர்மானிக்கப்பட்டன.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."